iSprout
Inspiring Workspaces

# பெருங்குடியில் இணை பணியிட மையம் திறப்பு

சென்னை,ஜன.3

சென்னை போன்ற மாநகரங்களில் அலுவலக பணியிடங்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. சிறிய அளவிலான தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அவர்களது தேவைக்கேற்ப சதுர அடியில் பணியிடம் வழங்கும் முறை தற்போது பிரபலமாகி வருகிறது.

4 பேர், ஐந்துபேர், 25பேர் என சிறிய அளவில் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக பழைய மகாபலிபுரம் சாலையில் பெருங்குடியில் உள்ள சரவணா மேட்ரிக்ஸ் டவரில்.5வது மற்றும் 6வது மாடியில் ஐஸ்ப்ரவுட் நிறுவனம் சார்பில் புதிய இணை பணியிட மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வணிக மையத்தில் சுமார் 60,000 சதுர அடி பரப்பளவில் 1100 இணை பணியிடங்களை அமைக்க அந்நிறுவனம் இலக்கு வைத்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், ஆராய்ச்சி உள்ளிட்ட பணிகளுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இடத்தேவைக்கு இந்த புதிய முறை நன்கு பயன்படுகிறது.

THEEKKATHIR | DATE 04-FEB-2020